**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 565/2019 P.W. 6/L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜான் ஜெரால்டு | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. மரியேந்திரன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 04.06.2025.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தொழில் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 19.03.2014ம் தேதி இரவு 08.00 மணியளவில் நானும் எனது தம்பி ஜான் ரூபர்ட் என்பவரும் இரணியல் ஜங்சனில் பேருந்திற்காக காத்திருந்த போது அங்கு இரணியல் காவலர்கள் வாகன தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்பொழுது குற்றம் சுமத்தப்பட்ட நபர் வேல்முருகன் அங்கு வந்துக் கொண்டிருக்கும் போது காவலர்கள் அவரை பிடித்தார்கள். அதற்கு என்னையும் எனது தம்பியையும் சாட்சியாக இருக்கும்படி கூறினார்கள். நாங்கள் அதற்கு ஒப்புக் கொண்டோம்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபரை விசாரணை செய்யும் போது அவர் தானாக முன்வந்து எனது அண்ணன் ஜான் பிரிட்டோ என்பவரின் வீட்டில் நகைகள் திருடியதை ஒப்புக் கொண்டார். மேலும் அவர் நகையை வீட்டில் வைத்திருப்பதாகவும் அதனை எடுத்துத் தருவதாகவும் கூறினார். அதனடிப்படையில் நாங்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர் வீடு இருக்கும் இடமான பாலன்விளைக்கு சென்றோம். அங்கு அவர் எங்கள் முன்னிலையில் 90 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் 26 பவுண் தங்க நகைகளும் எடுத்துக் கொடுத்தார்.

3. அதன்பிறகு போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் **அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 (10 புகைப்படங்கள்) என் முன் கைப்பற்றப்பட்டது தான். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. போலிசார் என்னை எத்தனை முறை எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால், ஒருமுறை காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். இரணியல் காவல்நிலையத்தில் வைத்து நான் ஒரு கையெழுத்து போட்டேன் என்றால், சரியல்ல நான் இரணியல் ஜங்சனில் வைத்து தான் ஒரு கையெழுத்து போட்டேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால், PVC Pipe பெண்டுகள் எலக்ட்ரிக்கல் வேலைக்காக தயார் செய்து வருகிறேன். நான் அதனை நிறுவனம் வைத்து தயார் செய்கிறேன் என்றால், இல்லை. சிறு தொழிலாக செய்து வருகிறேன். நான் அதனை எங்கு விற்பனை செய்கிறேன் என்றால், பல கடைகளில் விற்பனை செய்கிறேன். இரணியலிலும் சில கடைகளில் விற்பனை செய்கிறேன் என்றால், சரிதான்.

2. எனது தம்பி என்னுடன் விற்பனை செய்யமாட்டார் என்றால், சரிதான். நான் தினமும் எந்தெந்த கடைக்கு விற்பனை செய்கிறேன் என்பதை குறித்து அட்டவணை செய்து வைத்துள்ளேனா என்றால், இல்லை. இரணியல் பேருந்து நிறுத்தத்தில் நான் இருந்தேன் என்பதை காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால், இல்லை. எனது சகோதரரும் என்னுடன் விற்பனை செய்யும் பணத்தை வாங்குவதற்கு வருவதில்லை என்றால், சரிதான்.

3. நான் கடைகளில் எலக்ரிக்கல் சாதனங்கள் விற்பனை செய்வதை போலிசாரிடம் கூறியுள்ளேனா என்றால், இல்லை. நான் இரணியல் ஜங்சனில் எதற்காக நின்றிருந்தேன் என்றால், பேருந்திற்காக காத்திருந்தேன். நான் எந்த காரணத்திற்காக இரணியல் ஜங்சனில் காத்திருந்தேன் என்று விவரத்தை போலிசாரிடம் கூறவில்லை என்றால், சரிதான். எனது நீதிமன்ற விசாரணையிலும் நான் கூறவில்லை என்றால், சரிதான். நாங்கள் தானாகவே கைது செய்வதற்கு சாட்சியாக முன்வந்தோம் என்றால், சரிதான். அங்கு வேறு நபர்களிடம் சாட்சியாக இருக்கும்படி போலிசார் கூறவில்லை என்றால், சரிதான்.

4. நான் பேருந்து நிறுத்தத்தில் நின்றுக் கொண்டிருக்கும் போது எனக்கு தெரிந்த வேறு நபர்கள் அங்கு நிற்கவில்லை என்றால், சரிதான். நான் நீதிமன்றத்தில் போலிசார் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்கு வழக்கிற்கு முன்னால் தெரியுமா என்றால், தெரியாது. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் ஊரான குன்னங்காடிலிருந்து இரணியலுக்கு எவ்வளவு தூரம் என்றால், எனக்குத் தெரியாது.

5. நான் இரணியலில் எந்த ஜங்சனில் இருந்தேன் என்றால், இரணியலில் இருந்து தக்கலை செல்லும் ஜங்சனில் இருந்தேன். அந்த ஜங்சனில் பள்ளி மற்றும் கடைகள் உள்ளது என்றால், சரிதான். எந்த கடையின் முன்பு வைத்து இந்த சம்பவம் நடந்தது என்பது எனக்கு தெரியாது என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் ஊரான பாலன்விளை எந்த திசையில் உள்ளது என்பது எனக்குத் தெரியாது என்றால், சரிதான்.

6. குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீடு எந்த திசையில் உள்ளது என்று எனக்குத் தெரியாது என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டின் அடையாளங்கள் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். அதனின் அடையாளங்களை நான் தெரிந்துக் கொள்ள நான் முயற்சி செய்யவில்லை என்றால், சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் வீட்டு விலாசம் தெரியுமா என்றால், தெரியாது.

7. நான் காவல்நிலையத்தில் வைத்து அத்தாட்சியில் கையொப்பம் செய்து விட்டு போலிசார் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இவ்வழக்கில் என் அண்ணன் வீட்டில் திருடு போயிருப்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது அண்ணன் வீட்டில் திருடிய நபர் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான்.

8. இவ்வழக்கில் எனது அண்ணன் மற்றும் தம்பியை தவிர்த்து யாரும் சாதகமாக சாட்சி சொல்லவில்லை என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது. எனது அண்ணன் வீட்டில் நடந்த திருட்டு சம்பவம் குறித்து வேறு நபர்கள் சாட்சி சொன்னது குறித்து எனக்குத் தெரியுமா என்றால், தெரியாது. போலிசார் குற்ற சம்பவம் குறித்து எங்கள் ஊரில் வந்து விசாரணை செய்தார்களா என்றால், அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

9. குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது கெட்ட எண்ணத்தோடு பழி சுமத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.